www.padippakam.com

# உறவு

## மார்க்சிய தத்துவ இதழ்

தாஸ்னா பதிவு எண் : 230 / 18 / 99

இதழ் – 8 நவம்பர் 1999 ரூ. 5.00

1. ம.க.இ.க.விற்கு ஒரு கடிதம். "நாட்டை மீண்டும் காலனியாக்க வரும் அமெரிக்க மான்சாண்டோ விதைக் கம்பெனியை விரட்டி அடிப்போம்" – எனும் பிரசுரம் குறித்து.
2. (தேர்தல் புறக்கணிப்பு குறித்து) நந்தன் சிறப்பாசிரியர் சுப. வீரபாண்டியனுக்கு ஒரு கடிதம்





**சீனப்புரட்சியின் 50 ஆண்டு நிறைவு**
**(1949 - 1999)**

மார்க்சிய – லெனினிய – மாவோ சிந்தனை நீடுழி வாழ்க.

படிப்பகம்

www.padippakam.com


## ஆசிரியர் உரை

***வாசக தோழர்களே!***

வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க உறவு அச்சில் வந்தது; அதற்கு நல்ல வரவேற்பும் உள்ளது என்பதற்கு தமிழகத்தின் பல்வேறு புறங்களிலிருந்து வரும் கடிதம் மற்றும் வாழ்த்துக்களே சான்று.

சிற்றிதழாளர்களுக்கு 'உறவு'-ஐ அனுப்பினோம். அவர்களும் மாற்று இதழ்கள் அனுப்பியுள்ளனர். 'உறவு'ன் பணியை குறிப்போடு அறிமுகப்படுத்திய 'முங்காரி' மற்றும் 'சிற்றிதழ் செய்தி' ஆசிரியர்களுக்கும் எமது நன்றி!

மிகப் பெருவாரியான தோழர்கள் பழைய இதழ்களின் பிரதிகள் கேட்டு எழுதி இருந்தனர். ஆனால் அவர்கள் கேட்டபடி இதழ்கள் அனுப்ப இயலவில்லை. காரணம் பழைய இதழ்களை ஒளியச்சு எடுத்துத்தான் அனுப்ப வேண்டும். அதற்கு செலவழிக்கும் தொகையின் காரணமாக அடுத்த இதழ் வெளியிட முடியாத நிலை. எனவே அனுப்ப இயலவில்லை. இச்சிரமத்தை போக்கும் வகையில் உரிய தொகை அனுப்பித் தந்தால் நல்லது! எமது சிரமமான பணி தாங்கள் அறிய முடியாதது அல்ல. எமது முயற்சிக்கு தாங்களும் ஒத்துழைக்க வேண்டுகிறேன். பங்களிப்பு செய்ய வேண்டுகிறோம்.

அடுத்த இதழ் தோழர்களின் கடிதங்களிலிருந்து விமர்சனம் மற்றும் எமது பதில்களுடன் வருகிறது. தாங்களும் தங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பித்தர வேண்டுகிறோம். விவாதத்தை முன் எடுப்போம்.

முகமறியாமலே பேசி வந்த நாம் நேரில் சந்திப்போம். கருத்துக்களை பரிமாறிக் கொள்ள அழைப்பு விடுக்கின்றோம். இது பற்றி... இவ்விதழில் காண்க! நன்றி!

**உறவு 1 முதல் 7 வரையிலான இதழ்கள் வேண்டுவோர் ரூ.60/- அனுப்பவும்.**

## வரப்பெற்றோம் இதழ்கள் & புத்தகங்கள்

1. அருவி. ஏழவாது சிறப்பிதழ் மலேஷியா.
2. செம்பருத்தி 1998 ஏப்ரல் இதழ் மலேஷியா.
3. சிற்றிதழ் செய்தி இதழ் 31, 32, 33, பொள்ளாச்சி
4. இந்திய ஒப்பிலக்கியம் சனவரி 1999 (காலாண்டு இதழ்), திண்டுக்கல்
5. தமிழ்நேயம் 6, 12, கோவை
6. கல்லூரி ஆசிரிர் திறந்தமடல் (சனவரி 1999)
7. காலக்குறி இதழ் 10 1999, சென்னை
8. புதுயுகம் ஜீன் ஜீலை 1999, திருச்சி.
9. தமிழ் அமிழ்தம் சூன் 1999, திருவண்ணாமலை.
10. ஏழைதாசன் செப் - 1999, புதுக்கோட்டை.
11. புதியதடம் ஜீன் - நீலை 1999, இராமேஸ்வரம்.
12. முங்காரி ஆகஸ்டு 1999, கோவை.
13. கனவு இதழ் 32 ஜீன் 1999, திருப்பூர்.
14. கதவு மே - 1999, அருப்புக்கோட்டை.
15. பயணம் ஜீலை - ஆகஸ்ட் 1999, பெங்களூர்.
16. மனசு இதழ் 9 1999, புதுவயல்.
17. பாரதியின் கவிதா தேவி ஆகஸ்ட் 1999, வத்தலக்குண்டு.
18. மார்க்சியத்தின் எதிர்காலம் - தொகுப்பு ஞானி.
19. "புதிய தலைமுறை" பார்வையும் படைப்பும் 1967-1969.
    நிகழ்வெளியீடு, 123, காளீசுவரர் நகர், கோயமுத்தூர் - 641 009.
20. கூடங்குளம் ஒருகட்டுரைத் தொகுப்பு, யாழ் பதிப்பகம், கோயமுத்தூர்-641015

படிப்பகம்

www.padippakam.com


# ம.க.இ.க.விற்கு ஒரு கடிதம்

அன்புற்குரிய தோழர்களே!

தங்களது "நாட்டை மீண்டும் காலனியாக்க வரும் அமெரிக்க மான்சாண்டோ விதைக் கம்பெனியை விரட்டி அடிப்போம்" எனும் பிரசுரம் ஏற்படுத்திய பாதிப்புக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதே இக்கடிதத்தின் நோக்கமாகும்.

தோழர் லெனின் கண்ணோட்டப்படி ஏகபோக முதலாளித்துவம் என்பது முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்; தன்னைத் தானே அழித்துக் கொள்வதற்கான அழுகிய நிலையிலுள்ள முதலாளித்துவம்; அந்திமக்கட்டம் என்பார். வளர்ச்சி அடைந்த நாடு (ஏகபோக முதலாளித்துவம்) வளர்ச்சி பெறாத நாடுகளை (பின்தங்கிய பொருள் உற்பத்தி நிலவும் நாடுகளை) தனது சந்தையின் தேவைக்கென காலனிகளாக மாற்றும் கட்டமுமாகும். இதன்மூலம் காலனி நாடுகளின் வர்க்கங்களை தனது மேலாண்மைக்கு உட்பட்ட விதத்தில் வளர்க்கவும் தூண்டியது. அதாவது காலனி நாடுகளில் தரகு நிலப்பிரபு, முதலாளி வர்க்கங்களை உருவாக்குவதும் ஆகும். பின்தங்கிய நிலப்பிரபுத்துவ உற்பத்தியை (தரகு) முதலாளித்துவம் மிதமான வேகத்திலே அழிப்பதாகவும் இருந்தது. அதாவது தரகு நிலப்பிரபு வர்க்கத்தை தரகு முதலாளி வர்க்கத்தை உருவாக்குவதும் ஆகும். இந்நிகழ்வு 1985 வரை என்றும் சொல்லலாம்.

ஐரோப்பாவில் நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலிருந்து முதலாளித்துவ வர்க்கம் எந்தளவுக்கு உற்பத்தி சக்திகளை வளர்த்துச் சென்றதோ அந்தளவிற்கு காலனி நாடுகளில் நடைபெறவில்லை. எனவே பின்தங்கிய பொருள் உற்பத்தியானது காலனி நாடுகளில் தனது மேலாண்மைக்கு உட்பட்ட விதத்தில் அனுமதிப்பதும் ஆகியது. எனவே தான், முதலாளி வர்க்கம் வரலாற்றில் புரட்சிகரமான பாத்திரத்தை இழந்து விட்டது என்ற கருத்திற்கும் இடமளித்தது.

உலக அளவில் ஏகபோக முதலாளித்துவ அணிகளுக்கு இடையே முரண்பாடு வெடித்தது; உலக யுத்தமாகவும் மாறியது. இந்த முரண்பாட்டை தோழர் லெனின் வழிகாட்டலின் படி ருஷ்யாவில் புரட்சி வெற்றி பெற்றது. மறுபடியும் சில பத்தாண்டுகளில் மறு உலகயுத்தம் வெடித்தது. இதில் சோசலிச ருஷ்யா பிரிட்டன் தலைமை முதலாளித்துவ அணியின் பின்னால் நின்று செர்மன், சப்பான் அணியை தோற்கடித்தது. இதன் முடிவாக புதிய சோசலிச நாடுகளாக கிழக்கு ஐரோப்பிய நாடுகள், மற்றும் சீனாவும் உதித்தது. இதனால் உலகம் முன் எப்போதும் இல்லாதவகையில் சோசலிச முகாம், முதலாளித்துவ முகாம் என இரண்டுபட்டது; இதற்கு நடுவணாக ஐ.நா. மன்றமும் உதித்தது. மேலும் ஏகபோக முதலாளித்துவத்தின் உச்சமாக மேல்நிலை வல்லரசுகள் தோன்றின. இச்சூழலில் சந்தைக்கான மறுபங்கீடு உலக யுத்தம் மூலம் நடைபெறவில்லை; கெடுபிடி போர்கள் நடந்தன; மறைந்தன. இதன் விளைவாக ஒப்பந்தங்கள் வாயிலாகவே சந்தைகள் கைமாறின. இதுவே காலப்போக்கில் சந்தைக்கான போட்டி உலகயுத்தம் அல்லாத வழிவகைகளை செய்துவிட்டது. ரஷ்யாவின் மாற்றங்களும் தேவைக்கான உற்பத்தி என்பதிலிருந்து சந்தைக்கான உற்பத்தியாகவும் மாறியது. எனவே ருஷ்யாவில் வர்க்க வேறுபாடுகள் மறையாது வளர்ந்து நிலைபெறலாயின. சாராம்சமாகச் சொன்னால் ரஷ்யா முதலாளித்துவ நாடாக மாறுவதை நோக்கி அடியெடுத்து வைத்தது. இந்தவழியை 1980களுக்கு பின்னரே சீனாவும் கையாள்வதாக. மாறியது. எனவே சோசலிச உலகம் என்பது இல்லாமல் போனதோடு உலகமே முதலாளித்துவ உலகமாகவே மாறியது.

முதலாளித்துவ நாடுகளுக்குள் எழுந்த பொருளாதார நெருக்கடிகள் முதலாளித்துவ வர்க்கம் சமாளிக்க முடியாமல் திணறியது. இதை தணிக்கும் விதமாக வளர்ச்சி பெறாத நாடுகளில் நெருக்கடிகளை உருவாக்கியது; ஏன் முன்னாள் சோசலிச நாடுகளிலும் உருவாக்கியது. ஆனபோதிலும் முதலாளித்துவ வர்க்கம், ஒரு நெருக்கடியிலிருந்து மீள்வதற்குள், மற்றொரு நெருக்கடியில் சிக்கிக் கொண்டது. இது மார்க்ஸ் எங்கெல்ஸ் படைப்பான அறிக்கையின் வாசகங்களை ஞாபகப்படுத்துகிறது. பொதுவாகவே முதலாளித்துவ வர்க்கத்திற்கு நாளும் விரிவடைந்து வரும் சந்தை அவசியம். இந்த அவசியம் தான். நாடு, தேசம்,

படிப்பகம்

www.padippakam.com



கண்டம் எனும் எல்லைகளை தாண்டி வளர்ச்சி பெறவும் உலக அளவில் இன்றும் நிலவி வரும் பின்தங்கிய உற்பத்திமுறையை சந்தைக்கான உற்பத்தி முறையாக மாற்றுவதாகவும் அது வளர்ச்சி அடைந்துள்ளது. அதாவது வளர்ச்சி அடைந்த நாடுகளால், அதன் மேலாண்மை பெற்ற வர்க்கங்களால் ஆன பன்னாட்டு முதலாளிகளால் முன் வைக்கப்படும் கொள்கை தான் தாராளமயம், தனியார்மயம், உலகமயம் ஆகும். இக்கோஷங்கள் சாரத்தில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் பிரெஞ்சுப் புரட்சியின் முழக்கங்களை அடிப்படையாக கொண்டு காலநிலைமைகளை கணக்கில் கொண்டு, வார்த்தைகளில் ஆன வித்தியாசமே தவிர பிரெஞ்சுப் புரட்சியின் இரண்டாம் பதிப்பாகவே உள்ளது.

தோழர் லெனின் வங்கி மூலதனம், தொழில்துறை மூலதனம் ஒன்றுகலத்தலின் விளைவாக நிதிஆதிக்கக் கும்பல் உருவாதல் நிகழ்வைத்தான் குறிப்பிட்டார். ஆனால் இந்த நிதி ஆதிக்கக் கும்பல்கள் தான் உலக சமுதாயத்தை ஆட்டிப் படைக்கின்றனர். அதாவது இந்நிதி ஆதிக்கக் கும்பல்கள் நேரடியாக பொருள் உற்பத்தியில் ஈடுபடுவது இல்லை; மாறாக தொழில் நுட்பத்தின் வாயிலாகவே உலகப் பொருள் உற்பத்தியின் போக்கை தனக்கு சாதகமானவாறு மாற்றுகின்றனர்; கட்டுப்படுத்துகின்றனர். தொழில் நுட்ப ஆராய்ச்சிக் கூடங்கள் பிரம்மாண்டமானவை: இவற்றில் டஜன் கணக்கிலான, விஞ்ஞானிகள், பொறியலாளர்களை கொண்டு பெரும் முதலீட்டில் உருவாக்கப்பட்டவை.

இங்கு இன்னொன்றும் காணத்தக்கது. அதாவது, தொழில் நுட்பங்கள் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டால் அதை லாபகரமான முறையில் தொழிற் துறைக்கு பயன்படுத்த முன்னர் காலங்களில் 100, 150 வருடங்கள் அல்லது சில பத்தாண்டுகளோ தேவைப்பட்டன. ஆனால் இன்றோ, ஒருதொழில் நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டால் அதை லாபகரமான முறையில் கையாள குறைந்த காலமே தேவைப்படுகிறது. இதை எடுப்பாகச் சொன்னால், கண்டுபிடிப்பில் ஈடுபட்ட பொறியியலாளர், அல்லது விஞ்ஞானி தமது கண்டுபிடிப்பை எழுத்துபூர்வமாக எழுதி கொடுக்கும் முன்னரே நடைமுறைக்கு வந்துள்ளது. இதன் காரணமாகவே தான் செய்முறைக்கான காப்புரிமை மறைந்து, அதனிலும் உயர்வாக செய்பொருளுக்கான காப்புரிமை நடைமுறைக்கான சாத்தியப்பாட்டை அவசியம் ஆக்கியது. இதன்மூலம் மனித அறிவை (தொழில் நுட்பத்தை)யே சொத்தாக்கிவிட்டது; அதாவது இது மனிதர்களுக்கு இடையே மட்டுமல்லாது, நாடுகளுக்கு இடையேயுள்ள சீரற்ற தன்மையின் காரணமாக சுரண்டல் தொடர்வதற்கு வர்க்க மேலாதிக்கத்திற்கான கருவியாகவே தொழில்நுட்பம் உள்ளது.

தொழில்நுட்பம் மற்றும் பணபலம் படைத்த ஏகபோக பன்னாட்டு நிதி ஆதிக்கக் கும்பல்களில் ஒன்றுதான், அமெரிக்காவின் மான்சாண்டோ கம்பெனி ஆகும். இக்கம்பெனி உலகின் விவசாயத்தை தன் கைக்குள் கொண்டுவர துடிக்கிறது; இதற்கு அடித்தளமாக அக்கம்பெனியின் மரபு அணு பொறியியல் கண்டுபிடிப்பான எவர்மினேட்டர், டெர்மினேட்டர் தொழில் நுட்பங்களாகும். இந்த தொழில் நுட்பங்கள் மூலம் பின்தங்கிய நாடுகளின் விவாசயத்தை சந்தைக்கான உற்பத்தியாக மாற்றுகிறது; இதை நாம் முன்னர் குறிப்பிட்டது போல உற்பத்தியில் நேரடியாக ஈடுபடாமலே தொழில் நுட்பத்தின் வாயிலாக மறைமுகமாக மேலாதிக்கம் செய்வதாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நிதிஆதிக்கக் கும்பல்கள் வளர்ச்சி பெறாத அல்லது பின்தங்கிய நாடுகளின் பொருள் உற்பத்தியை அழிப்பதுடன் கூடவே லாப அடிப்படையிலான சந்தைக்கான உற்பத்தியை கொண்டு வ்ருகிறது. இதன் மூலம் ஏகபோக முதலாளித்துவம் நிலவுடமை உற்பத்தியை அழிக்கும் விதமாக உற்பத்தி சக்திகளை வளர்த்துச் செல்லமுடியாது; அதன் புரட்சிகரப்பாத்திரத்தை இழந்துவிட்டது என்ற கருத்தாக்கத்தை மறுபரிசீலனை செய்யத் தூண்டுகிறது. இதுகாறும் நிலவுடமை உற்பத்தியை அழிப்பதற்கான கால அவகாசத்தையே ஏகபோக முதலாளித்துவம் எடுத்துக் கொண்டுள்ளது எனவும் கருத இடமளிக்கிறது.

ஏகபோக முதலாளித்துவம் நிலவுடமை உற்பத்தியை அழிக்காமலும், தான் இதுகாறும் வளர்த்து வந்த உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கேற்ற உற்பத்தி உறவை, சமூக மேலாண்மை உறவுகளை பேண முடியாமலும் நெருக்கடிக்கு குள்ளானது. இந்நெருக்கடியான சூழலில் தான் கம்யூனிஸ்டுகளும் உற்பத்திச் சக்திகளை விடுவிக்கும் பொருட்டு புதிய சனநாயக

படிப்பகம்

www.padippakam.com



உறவை கொண்டு வந்தனர். இந்த புதிய சனநாயக உறவை முன்னிறுத்தி புதிய சனநாயகப் புரட்சி சீனாவில் சாதிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக சோசலிச உற்பத்தியை நோக்கிச் செல்லவும் முயற்சி செய்யப்பட்டது. இம்முயற்சி செய்யப்பட்ட சீனாவிலேயே பின்தங்கிய உற்பத்தியை நோக்கி தள்ளப்பட்டதும் முக்கிய விசயமாகும். அது குறித்து இங்கு விரிவாக பேசமுடியாது. வேறொரு சந்தர்ப்பத்தில் முயற்சிப்போம். ஆனால் நம் போன்ற நாடுகளில் ஏன் உலகின் பெரும்பகுதி (வளர்முக நாடுகளில்) நாடுகளில் சீனாவைப் போன்று புரட்சியே நிகழ்த்த முடியாமல் போய்விட்டது. அதற்கான காரணங்கள் குறித்தும் நாம் இங்கு பேசமுடியாது. என்றாலும் நமது முயற்சி சற்று பின்னுக்கு தள்ளப்பட்டது; மேலும் நாம் நமது முயற்சியில் வெற்றி பெறவில்லையென்பதாலேயே அச்சூழலே நிலவுகிறது என எந்திரவியலாகச் சொல்ல முடியாது. ஏனென்றால் சமூக இயக்கம் என்பது மற்றெல்லா இயக்கங்களை எல்லாம் விட பரஸ்பரம் மனிதர்களுக்கு இடையிலான உணர்வுபூர்வமான இயக்கமாகும். எனவே புதிய சனநாயகப் புரட்சிக்கு அடிப்படையான சமுதாய காரணிகளை நாம் முன்னர் காட்டியது போல ஏகபோக முதலாளி வர்க்கமே அழிக்கத் தொடங்கி உள்ளது. இதை புரட்சிகர இயக்கங்கள் கணக்கில் கொண்டதாகத் தெரியவில்லை. இதன் வெளிப்பாடாகவே தங்கள் பிரசுரம் முன் வைக்கும் கண்ணோட்டம் உள்ளது. ஆகவே தான் தாங்கள் எழுதுகிறீர்கள், "பசுமைப் புரட்சியின் இன்னொரு விளைவு விவசாயிகள் பணப்பயிர்களை பயிரிடுவது அதிகரித்துவிட்டது." மேலும் "நம் போன்ற பின்தங்கிய நாடுகள் மீது ஏகாதிபத்திய நாடுகளால் திணிக்கப்பட்டது தான் பசுமைப்புரட்சியாகும்".

ஏகபோக முதலாளி வர்க்கம் தனது வாழ்வின் பொருட்டு சந்தைக்கான உற்பத்தியாக முன்னாள் காலனிகளில் கொண்டு வருவதும் அதன் உடன் நிகழ்வாக பணக்கார விவசாயிகள் சாரத்தில் முதலாளி வர்க்கமாக உருவாக்கப்பட்டதையுமே காண்கிறோம். இந்தப் பசுமைப்புரட்சியின் சாதக பாதகங்களை கணக்கில் கொண்டுதான் அமெரிக்காவின் மான்சாண்டோ கம்பெனி செயல்படுகிறது என தாங்களே ஒத்துக்கொள்கிறீர்கள். இதன் வெளிப்பாடாகவே தங்கள் பிரசுரத்தில் எழுதுகிறீர்கள், "கடைசியில் விவசாயம் என்பது உணவுத்தேவைக்கான உற்பத்தி என்பதிலிருந்து இலாப நோக்கத்துக்கான உற்பத்தியாகிவிட்டது".

மனித சமுதாய வரலாற்றில் தேவைக்கான உற்பத்தி என்பது பாட்டாளி வர்க்க சகாப்தத்தில் மட்டுமே சாத்தியம். காரணம் பாட்டாளி வர்க்கம் மட்டுமே வர்க்க வேறுபாடுகளை அகற்றும் தனிச் சொத்துடமை உறவுகளை அகற்றுகிறது; எல்லாவற்றையும் சமூகச் சொத்தாக்குகிறது; நிர்வாகம் செய்கிறது; சுருக்கமாகச் சொன்னால் பாட்டாளி வர்க்கம் சொத்தின் உடைமை வடிவத்தை மாற்றவில்லை; சொத்து சொத்தாக இருப்பதை அழிக்கிறது; வரலாற்றில் தனிச்சொத்து வர்க்க ஆதிக்கத்திற்கான கருவியாக இருத்தலையும் இல்லாது செய்துவிடுகிறது.

மேலும் ரஷ்ய, சீன புரட்சி வெற்றி பெற்று தேவைக்கான உற்பத்தி என்ற செயல்பாட்டில் கூட நமது திட்டமிடுதலில் உள்ள குறைபாடுகள் காரணமாக பின்னோக்கி தள்ளப்பட்டது; வர்க்கங்களை, வர்க்கப் பகைமைகளை அகற்றும் முயற்சியும் சற்றே பின்னுக்கு தள்ளப்பட்டது என்றும் வரலாற்றில் காண்கிறோம்.

பாட்டாளி வர்க்கத் தலைமையிலான புரட்சியே நடைபெறாத நாடுகளில் (நம் போன்ற நாடுகளில்) நிலவுவது பின்தங்கிய நிலவுடமை உற்பத்தியே ஆகும். இந்த நிலவுடமை உற்பத்தி என்பது முதலாளித்துவ உற்பத்தியோடு ஒப்பிடுகையில் சந்தைக்கான உற்பத்தி அல்ல; என்றாலும் சமுதாயத்தின் மொத்த தேவையை நிறைவு செய்யும் அளவு பெரும்பாலும் இருந்ததில்லை; இவ்வாறு குறைவான அளவு இருப்பதே சமுதாயத்தின் வர்க்கங்கள் இருப்பதற்கு ஆதாரமாக அமைகிறது. தேவையையும் மிஞ்சிவிடும் அபரிமிதமான கட்டத்தில் வர்க்கங்கள் இருப்பதற்கான அவசியமான காரணிகள் இல்லாமல் போகின்றன. அத்தகைய அபரிமிதமான உற்பத்தியில் பொருள்கள் மனித சமுதாய வரலாற்றிலேயே முதலாளித்துவ சமுதாயத்தில் மட்டுமே அடையப்பெறுகிறது. ஆனால் வர்க்கங்கள் ஒழிந்துவிடுவது இல்லை; காரணம் உற்பத்தி சாதனங்களின் மீதான மேலாதிக்கம் ஆகும். இந்த உற்பத்தி சாதனங்களை பாட்டாளிவர்க்கம் ஒருசேர சமுதாயத்தின் செல்வமாக சேர்ப்பதன் மூலம் வர்க்கங்கள் நிலவுவதற்கான அவசியமான காரணிகள் அழிக்கப்படுகின்றன என்பதும் தெளிவு.

படிப்பகம்

www.padippakam.com



எனவே "உணவுத் தேவைக்கான உற்பத்தி" என்பது சரக்கு உற்பத்தி வளர்ச்சி பெறாத கிராமத்தின் சுயதேவையை பரஸ்பரம் நிறைவு செய்யும் வர்க்கப் பகைமைகள் வளர்ச்சி பெறாத கட்டத்தையே குறிப்பதாகும் அதாவது இந்திய சாதிய வார்த்தையில் சொன்னால்....
"நமது நாட்டு மக்கள் தமது பாரம்பரிய விவசாயத்தில் இயற்கையோடு பொருந்தி இதற்கேற்ப தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். அவர்களுக்கு விவசாயம் ஒரு தொழில் மட்டுமல்ல: அதுவே வாழ்க்கையாகவும் இருந்தது; அதுவே பண்பாக இருந்தது."

இதிலிருந்து நாம் அறிவதென்ன? விவசாயத்திற்கு தேவையான அனைத்து வேலைகளும் இங்கு சாதியப்பிரிவினையின்படி இருந்தன; அதனுடன் கூடவே சாதியத் திருமணமுறை, சடங்கு சம்பிரதாயங்களும் இருந்தன. எனவும் ஒத்துக் கொள்வதாகிறது. ஆகவே ஏகபோக முதலாளித்துவம் கொண்டுவரும் சந்தைக்கான உற்பத்தி முறைக்கு எதிராக, நிலவிவரும் சாதிய நிலவுடமை அமைப்பையே முன்நிறுத்துவதாகவும், அதையே பாதுகாக்க வேண்டும் என்பதாகவும் மாறிவிடுகிறது. இது நாமே முயன்று புதிய ஜனநாயக உறவை - சமுதாயத்தை படைக்காத சூழலில் நிலவுடமை அமைப்பை வேறுயாரும் அழித்தல் கூடாது என்பதாகிறது. இது வரலாற்றின் வளர்ச்சியில் ஆதிபுராதன பொதுவுடமைச் சமுதாயம், அடிமைச்சமுதாயம், இந்தியாவிலோ சாதிய நிலவுடமைச் சமுதாயம், முதலாளித்துவச் சமுதாயம், சோசலிச சமுதாயம் என்ற வரிசை தவிர்க்க இயலாது என்ற மார்க்சின் கண்ணோட்டத்தை ஏற்க மறுப்பதாகும். வரலாற்றின் சக்கரத்தை பின்னோக்கி இழுப்பதாகவும் உள்ளது. எப்படியிருந்த போதிலும், நிலவுடமைச் சமுதாயம் என்பது முதலாளித்துவ சமுதாயத்தோடு ஒப்பிடும் போது பிற்போக்கானதே! ஆனால் இந்த நிலவுடமை அமைப்பை ஏகபோக முதலாளித்துவம் அழிக்காத சூழலில் தான் முதலாளித்துவத்தை பிற்போக்கானது என அழைக்க நேர்ந்தது என்ற காரணிகளையும் அது மறந்து விடுகிறது. மேலும் இந்திய நிலவுடமைச் சமூகம் பிரிட்டானியர்கள் கையில் எவ்வாறு புனரமைக்கப்பட்டது என்பதை உற்று கவனித்து வந்த மார்க்ஸ் எழுதினார், "இந்தியரின் சமுதாய அமைப்பு அழிவதை காணும் போது நமக்கு வேதனை அளிக்கிறது. என்றாலும், நாளை நல்லது நடக்க வேண்டும் என்பதற்காக இன்று ஒரு கெட்டது நடக்குமாயின் அதை வரவேற்கவும் தயாராக இருக்கிறேன்." (மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல் 3). மேலும் சுதந்திர வாணிகம் இந்தியாவில் என்ன பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்றும் காட்டினார். இந்தியர்களின் வாழ்வை, நெசவு, விவசாயத்தை அழிப்பதாக இருந்தாலும் உலகமானுட வரலாற்றில் சுதந்திர வாணிகம் என்பது சமுதாயப்புரட்சியை முன்கொண்டு வருகிறது: இந்த அர்த்தத்தில் சுதந்திர வாணிக நடவடிக்கையை ஆதரிக்கிறேன் என்றார் மார்க்ஸ். பார்க்க "மெய்யறிவின் வறுமை" பிற்சேர்க்கை.

ஒவ்வொரு பொருள் உற்பத்திக்கட்டமும் தனக்கென சில குறிப்பிட்ட உற்பத்தி உறவுகள், சமூக உறவுகள் வர்க்கங்கள், அதை நியாயப்படுத்தும் அரசியல் பண்பாட்டு நெறி, சட்டம் போன்றவைகளையும் கொண்டுள்ளது. அந்த வகையில் பார்த்தால் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நாட்டை பாதுகாப்பது என்றபடி நடப்பிலிருக்கும் உற்பத்தியை, வர்க்க வேறுபாடுகளை, பண்பாட்டு நடவடிக்கைகளை பாதுகாப்பதும் என்ன நோக்கங்களுக்காக யாருடைய நலன்களுக்காக எனவும் காணவேண்டி வரும்.

பசுமைப் புரட்சியின் தொடர்ச்சியாகவே இன்றைய நவீன விவசாயம் என்ற பெயரில் ஏகபோக சக்திகள் மேற்கொள்கின்றனர். இது யாருடைய நலன்களுக்கானது? இதை தங்கள் வார்த்தையில் சொன்னால்,—

"பசுமைப்புரட்சியில் வசதியான விவசாயிகள் சிறு விவசாயிகளானார்கள்; சிறுவிவசாயிகள் நிலமற்ற கூலி விவசாயிகளானார்கள்; நிலமற்ற கூலிவிவசாயிகள் பிழைப்பதற்கான நகரத்தை நோக்கி ஓடினார்கள்.

மேலும் எழுதுகிறார்கள். "தேசங்கடந்த வேளாண் உணவுக்கழகங்கள் நமது நாட்டில் அணிய (ரெடிமேடு) உணவுகளை விற்கவும், உலகமயம் அனுமதிக்கிறது. இதற்காக நிலஉலச்சவரம்பு சட்டம்படிப்படியாக நீக்கப்பட உள்ளது. குளங்கள், ஏரிகள் கால்வாய்கள் தனியார்கள் நீண்ட குத்தகைக்கு எடுக்கவும் சட்டபூர்வ ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவைகளின் மூலம் கோட்டு சூட்டுடை கட்டிய வெள்ளைக்கார புதிய

படிப்பகம்

www.padippakam.com



பண்ணையார்கள் உருவாக்கப்பட இருக்கிறார்கள். நமது விவசாயிகள் வந்த விலைக்கு நிலத்தை விற்றுவிட்டு (நட்டத்தில் விவசாயம் செய்து கடனைப் பெருக்கிக் கொள்வதை விட வந்தவிலைக்கு விற்க விவசாயிகள் தயார்) பண்ணையடிமைகளாகின்ற கட்டாயம் இருக்கிறது".

மேலே கண்டவரிகள் தெளிவுபடுத்துவதாவது, விவசாயம் முழுவதும் சந்தைக்கான உற்பத்தியாக மாற உள்ளது; இதற்கு சாதகமாகவே குளங்கள் கால்வாய்கள் வெட்டப் படுகின்றன; உணவு வகைகள் எல்லாம் அணிய வகைகளாக மாறிவிடும். இது உண்மையே! நம்போன்ற பின்தங்கிய நிலவுடமை உற்பத்தி நிலவும் நாடுகளில் மாற்றவியலாது. இதை இந்த நாட்டு சட்டதிட்டங்களும் ஏற்பாடு செய்யப்படுகிறது. இதன் விளைவாக எப்போதும் இல்லாதவகையில் மூலதன திரட்சி அடையும்; சொத்துக்கள் ஒரு சிலரிடம் சேரும்; அதற்கு எதிராக உடைமையே அற்றவர்களும் உருவாவர். இது நிலவுடமை உற்பத்தியிலிருந்து முதலாளித்துவ உற்பத்தியாக மாறும் நாடுகள் அனைத்திலும் நடந்தே தீரும். இதை யாரும் மாற்றவியலாது. நிலமற்ற கூலிவிவசாயிகள் வருங்கால சமுதாயத்தின் பாட்டாளி வர்க்கமாக இருப்பர்; என நிலவுடமை உற்பத்தியிலிருந்து முதலாளித்துவ உற்பத்தி வளர்ச்சி பெற்ற நாடுகளின் வரலாறுகள் தெரிவிக்கின்றன. அதே போலவே நிலவுடைமை உற்பத்தியிலிருந்த வர்க்கப்பிரிவு முதலாளிகளாக, விவசாயத்துறை மாற்றுகிறது. அவர்களை முதலாளி வர்க்கமாகத்தான் பார்க்கமுடியும். இதற்குமாறாக, புதிய பண்ணைக்காரர்கள் என கடந்த வரலாற்றிலிருந்து பார்க்க இயலாது என்பதும் தெளிவு.

இந்தப் பாட்டாளி வர்க்கம் தான் உண்மையிலேயே வர்க்க சமுதாய வரலாற்றிலேயே முற்போக்கான வர்க்கமாகும். ஆனால் அவர்களை "பண்ணையடிமைகள்" என்ற மரபு வழிப்பட கருத்திலேயே சொல்வதாக உள்ளது; மேலும் இவ்வர்க்கம் உருவாவதற்கான அடிப்படையாக அமையும், சிறு விவசாயிகள் நலனையே பிரதானமாக எடுத்துக் கொள்வதாகிறது. மேலும் "பொருள் உற்பத்தியில் ஏற்படும் மாறுதலின் விளைவாக அனைத்து வர்க்கங்களும் அழிந்து விடுகின்றன. பாட்டாளி வர்க்கம் தான் அதன் நேரடி விளைவால் உதித்தெழுகிறது" என்று பேராசான் எங்கெல்ஸ் எழுதிய டூரிங்குக்கு மறுப்பில் காட்டியதையும் கணக்கில் கொண்டதாக தெரியவில்லை, எனவே பாட்டாளி வர்க்கத்தின் நலனிலிருந்து சமுதாயத்தை நாட்டை பார்க்காமல், அதற்கு மாறாக, அதற்கே முன்னோடியாக அமையும் சிறுவிவசாயிகள் நலனிலிருந்தும் பாட்டாளி வர்க்கத்தின் நலனை பார்ப்பதாகிறது. இதை சுருக்கமாகச் சொன்னால் பாட்டாளி வர்க்கம் உருவாகாமலே பாட்டாளி வர்க்க விடுதலை பேசுவது சிறுவிவசாயிகள் (முதலாளிகளாக உருப்பெறுவதற்கு அடிப்படையானவர்கள்) நலனை முதன்மைப்படுத்துவதிலேயே பாட்டாளி வர்க்கத்தின் நலனும் உறைந்துள்ளது. என்று விளக்குவது கற்பனாவாத முறையில் பாட்டாளி வர்க்கத்தினரை ஏமாற்றுவதே ஆகும். இது எந்த வர்க்கம் ஆட்சியிலிருக்கிறதோ அந்த வர்க்கம் தனக்கான நலனையே எல்லா வர்க்கங்களுக்கும் மக்கள் திரளுக்கும் உரியதாக காட்டுவதும் இயல்பு; அதேபோலவே தாங்களும் பார்ப்பதாகவே உள்ளது. இது எவ்விதத்திலும் கம்யூனிஸ்டுகள் செயலாக காட்டமுடியாது. ஏனென்றால் அவர்கள் உடைமையற்ற வர்க்கமாகிய பாட்டாளி வர்க்கத்தையே தலைமை சக்தியாக கருதுகிறார்கள்; அவ்வர்க்கத்தின் சித்தாந்த வாதிகளும் ஆவர். ஆனால் தாங்கள் பாட்டாளிவர்க்கத்திற்கு முந்தைய வர்க்கமான முதலாளி வர்க்க கண்ணோட்டத் தையும், அவ்வர்க்கத்தின் நலனை முதன்மைப்படுத்தும் சித்தாந்த வாதியாகவே கருதமுடியும்.

மேலும், இவ்வாறு பின்தங்கிய பொருள் உற்பத்தி மற்றும் அதன் விளைவான வர்க்கங்களின் நலனை பாதுகாப்பது என்ற தங்களின் கண்ணோட்டம் முன்வைக்கும் எதிர்ப்பு எத்தகையது? அது என்ன விளைவுகளை பின்விளைவாக கொண்டிருக்கும் என்பதும் காணத்தக்கது. பிரசுரத்தில் காண்பது....

"இனி வேறு எந்தச்சட்டத்தாலும் இவற்றைத் தடுத்து நிறுத்த முடியாது. மாறாக நமது அரசே இவற்றைப் பாதுகாக்கும். இதை எதிர்த்துப் போராடும் பொதுமக்களையும், விவசாயிகளையும் நமது அரசே அடக்கிஎடுக்கும்."

இன்று நடைபெற்றுவரும் பொருள்உற்பத்தியிலான மாற்றம் நாடுகளுக்கு, அரசுகளுக்கு இடையிலான இடைவெளியை குறைத்துள்ளது; அதாவது முன்னாள் காலனிநாடுகளின் ஆளும் வர்க்கங்கள் குறிப்பாக தரகு முதலாளி வர்க்கத்தையும் (ஏனென்றால் தரகு

படிப்பகம்

www.padippakam.com



நிலப்பிரபு வர்க்கம் அழிகிறது; அல்லது முதலாளிவர்க்கமாக மாற்றப்படுகிறது) பன்னாட்டு ஏகபோக முதலாளி வர்க்கத்தையும் பிரித்துப் பார்க்க இயலாது; ஒரே நாணயத்தின் இருபக்கங்களைப் போன்றவர்கள். இதன் வெளிப்பாடாகவே அரசும் இருக்கும். அதாவது அவர்களது நலனை பிரதிநித்துவப்படுத்தும். சுருக்கமாகச் சொன்னால், பின்தங்கிய உற்பத்திமுறையையும், அதன் ஆளும் வர்க்கங்களையும் மேலும் அதன் தனது வாழ்வுக்கான போராட்டத்தையும் அடக்கி ஒடுக்கும் என்பதாகும். இந்நடைமுறை உலகில் மார்க்ஸ் எங்கெல்ஸ் தமது காலத்தில் முதலாளி வர்க்கத்தின் செயலை குறித்து எழுதியதோடு ஒப்பிடுவதாகவே உள்ளது.

"எங்கெல்லாம், முதலாளித்துவ வர்க்கம் ஆதிக்க நிலைபெற்றதோ, அங்கெல்லாம் அது எல்லாப் பிரபுத்துவ உறவுகளுக்கும் தந்தைவழிச் சமுதாய உறவுகளுக்கும் கிராமந்திரப் பாரம்பரிய உறவுகளுக்கும் முடிவுகட்டியது.... மனிதனது மாண்பினைப் பரிவர்த்தனை மதிப்பாய் மாற்றியிருக்கிறது. சாசனங்களில் பிரகடனம் செய்யப்பட்ட விலக்கவோ, துறக்கவோ முடியாத எண்ணிலடங்கா சுதந்திரங்களுக்கு பதிலாய், வெட்கங் கெட்டவாணிப சுதந்திரமெனும் ஒரேயொரு சுதந்திரத்தை ஆசனத்தில் அமர்த்தி இருக்கிறது....

மேலும் ஆசான்கள் எழுதுகின்றனர். தனித்தனி நலன்களும் சட்டங்களும், அரசாங்கங்களும் வரிவிதிப்பு முறைகளும் கொண்டனவாய்ச் சுயேச்சையாகவோ, அல்லது தளர்ந்த இணைப்புடனோ இருந்த மாநிலங்கள் ஒரே அரசாங்கத்தையும் ஒரே சட்டத்தொகுப்பையும், தேச அளவிலான ஒரே வர்க்க நலனையும் ஒரே தேச எல்லையையும் ஒரே சுங்க வரிமுறையும் கொண்ட ஒரே தேசமாய் ஒரேசேர இணைக்கப்பட்டன......

மேலே காட்டிய வரிகளின் சாரத்தையே இன்றைய முதளாளிவர்க்கம் கைக்கொள்கிறது என தாங்களே எழுதுகிறீர்கள்.

"ஏழை - பணக்கார நாடுகள் என்ற வித்தியாசம் இல்லாமல் ஒரே மாதிரியான வர்த்தக ஒழுங்குச் சட்டத்தை ஏற்படுத்த வேண்டும்.... பிற நாடுகளின் சட்டதிட்டங்களை எல்லாம், குறிப்பிட்ட காலகெடுவுக்குள் மாற்றிவிட வேண்டும் என்று நிபந்தனையும் விதிக்கிறது. இது ஒழுங்காக நடக்கிறதா? நடக்காத நாடுகளை எப்படி செய்யவைப்பது? என்பதையெல்லாம் கண்காணிக்கும் உயர் அதிகாரம் கொண்ட உலக வர்த்தக கழகம் (W.T.O.) என்ற அமைப்பையும் உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

இது நமது கண்ணோட்டத்தை சரி எனக் சொல்வதாகிறது. இதன் மூலம் நமக்கு கீழ்கண்ட கேள்விகள் எழுகின்றன

(1) புதிய ஜனநாயகப் புரட்சி என்பது சாத்தியம் தானா?

(2) புதிய ஜனநாயகப் புரட்சி நடத்தவேண்டும் என்ற பெயரில்... பின்தங்கிய நிலவுடைமை அமைப்பை கட்டிக் காப்பது எவ்வாறு சரியாகும்?

(3) ஏகபோக முதலாளி வர்க்கம் நிலவுடமை அமைப்பை அழிப்பதை கையில் எடுத்துக் கொண்டு விட்டதால் புரட்சியின் தன்மை மாறுபடத் தானே செய்யும்?

(4) பின்தங்கிய உற்பத்தியை அழித்து அதன்விளைவாக அழியும் சிறுவிவசாயிகள் பணக்கார விவசாயிகள் அழிவதும் கூட, அவர்கள் பாட்டாளிகளாக தோற்றம் எடுப்பதை தடுப்பதுதானே! தான் சார்ந்த வர்க்கம் உடைமை அற்ற வர்க்கமாக மாறுவதைத்தான் கடந்தகால வழிப்பட்ட முறையில் பண்யைடிமைகளாக மாறுவர் என்ற கருத்தை முன்வைப்பது என புரிந்து கொள்ளமுடியும். எனவே கம்யூனிஸ்டுகள் பாட்டாளிவர்க்க நலனை முன்னிலைப்படுத்தாத ஒன்றாக மாறிவிடுமே?

(5) தான் சார்ந்த வர்க்கம் கீழ் நிலைக்குத் தள்ளப்படுவதையே நாட்டிற்கு ஏற்படும் நெருக்கடியாக காட்டுவது பாட்டாளிவர்க்கம் அல்லாத அனைத்து வர்க்கங்களின் செயலாகவே வரலாற்றில் காண்கிறோம். இதை தாங்களும் சொல்வது கற்பனை வாதமான கண்ணோட்டம் தானே! பாட்டாளி வர்க்கமல்லாத வர்க்கங்களின் நலனை பிரதிநித்துவப் படுத்துவது தானே!

(6) பாட்டாளி வர்க்கமாக மாறும் நிகழ்வையே நாடு மறுகாலனியாவதாக காட்டுவதும் தவறு தானே!

படிப்பகம்

www.padippakam.com



(7) உலகில் நாடு, தேசம், கண்டம் கடந்து எல்லாவகையிலும் ஒரே சட்டம் என்றபடி உருவாவது தனிநாட்டில் சோசலிசம் நிலை நிறுத்துவது சாத்தியம் எவ்வாறு?

இக்கேள்விகளை எல்லாம் மாறிவரும் சூழலில் திரும்பத் திரும்ப எழுவதற்கான புறநிலை சாத்தியக்கூறுகள் என்ன என்று பார்க்கவேண்டும்; இதற்கு மாறாக பார்ப்பது வரலாற்றை எந்திரவியலான முறையில் விளக்கமளிப்பது தவிர வேறல்ல என்றாகிவிடும். எனவே தாங்கள் இதற்கெல்லாம் சரியான பதில் அளிப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

புரட்சிகர வணக்கங்களுடன்.

**ஆசிரியர்**

---

## தோழர் சுப.வீரபாண்டியனுக்கு ஒரு கடிதம் தேர்தல் புறக்கணிப்பு குறித்து.

*அன்பிற்குரிய தோழர் சுப. வீ அவர்களுக்கு!*

தாங்கள் நந்தன் இதழ் 1-16, செப் - 1999-ல் "நாட்குறிப்பிலிருந்து" எனும் பகுதி படித்தேன். அதில் தாங்கள் காட்டி இருக்கும் தேர்தல் புறக்கணிப்பு எந்தளவிற்கு சரியானது; எந்தளவிற்கு எதார்த்த சூழலிக்கு பொருந்தும், என சிந்திக்கத் தொடங்கினேன். அதன் வெளிப்பாடுதான் இந்தக் கடிதம்.

தாங்கள் தேர்தலில் பங்கெடுப்பது தவறானது; புறக்கணிப்பதே சரியானது; விடுதலை சிறுத்தைகள் அமைப்பு உட்பட, தலித் மக்கள் மத்தியில் செயலாற்றும் உஞ்சைராசன் போன்றவர்கள் கூட தேர்தல் பங்கெடுப்பு என்ற நிலைப்பாடு சரியல்ல; அவர்களது கொள்கை பிடிப்பின்மையைக் காட்டுகிறது. நெருக்கடி காலத்திலும் எதையும் சமாளிக்கும் உறுதியற்ற தன்மையைக் காட்டுகிறது. என நாகரீகமாக..... நளினமாக விமர்சனத்தை முன்வைத்துள்ளீர்கள் விமர்சனத்தைவிட, விமர்சனத்தை முன் நிறுத்தும் அணுகுமுறை பாராட்டத்தக்கது.

தேர்தல் புறக்கணிப்பு என்பதை சமுதாய நடப்பில் பார்த்தால் மாலெக்குழுக்கள் கொண்டிருக்கும் கண்ணோட்டம் தான்! அதே போலவே தேர்தல் பங்கெடுப்பு என்பது CPI, CPI(M) கண்ணோட்டம் தான் எனப்புரிந்து கொள்ளமுடியும்.

இவ்விரு எதிரும்புருமான கண்ணோட்டம் கடந்த பல பத்தாண்டுகளாக நடப்பில் உள்ளவை. இவ்விரு பிரிவினரும் தாங்கள் தான் எதார்த்த சூழலை புரிந்து கொண்டுள்ளோம்; புரட்சியை முன்னெடுக்கும் புரட்சிகர சக்திகள் எனவும் உரிமை பாராட்டுவர். என்றாலும், இவ்விரு போக்குகளும் எந்தஅளவுக்கு பொதுவுடமைச் சமுதாயத்தை நோக்கிச் செல்லும் பயணத்திற்கு பயன்படக் கூடியது என மறு பரிசீலினை செய்வதும் காலத்தின் கட்டாயமாக உள்ளது. இதை வெறும் ஒரு சில தனிமனிதர் விருப்பம் எனச் சுருக்க முடியாது. மாறாக சமுதாய வளர்ச்சிப் போக்கில் ஏற்படும் பின்னடைவைத் தொடர்ந்து எழும் விமர்சனபூர்வமான அணுகு முறையாகவே காணவேண்டும் காணவும் முடியும்.

பொதுவுடமைத் தத்துவத்தை இரத்தினச் சுருக்கமாகச் சொன்னால் அதுவும் பேராசான் எங்கெல்ஸ் வார்த்தைகளில் சொன்னால் "தனிச் சொத்துடமை ஒழிப்பு" எனலாம். பாராளுமன்றம் என்பது தனிச்சொத்து அடிப்படையிலான சமுதாயத்தினை கட்டிக்காக்கும் - நிர்வாகம் செய்யும் அரசியல் வடிவமாகும். பாராளுமன்ற ஆட்சியதிகாரத்தை கைப்பற்ற தேர்தல் மூலம் எதிர்கட்சி ஆளும் கட்சியாக மாறலாம். ஆனால் ஆளும் வர்க்கமாக மாறஇயலாது. அதாவது உழைக்கும் வர்க்கத்தின் ஆட்சியை கொண்டு வர இயலாது.

பாராளுமன்ற ஆட்சி என்பது தனிச்சொத்துடமையை பாதுகாக்கும் நிறுவனம் தான் என்பதை அறிய விரும்பினால் பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளின் முதலாளித்துவ வர்க்க வளர்ச்சியின் வரலாற்றை காண வேண்டும். ஏனென்றால் பிரிட்டன், பிரான்சும் தான் பாராளுமன்ற ஆட்சியின் தாயகமாகும். என்றாலும், பாராளுமன்ற ஆட்சிமுறை வரலாற்று வழியில் பல்வேறு நாடுகளில், தேசங்களில் பல்வேறு கட்டங்களை கடந்து வந்துள்ளது. ஆனால் அதுகுறித்து இங்கு விரிவாக விவரிக்க முடியாது. அது தேவையற்றது. மேலும்

படிப்பகம்

www.padippakam.com



நாம் எடுத்துக் கொண்ட பிரச்னையிலிருந்து விலகுவதாக அமைந்து விடும். என்றாலும் அதைச் சாரமாக காட்ட முயலுவோம்.

பிரிட்டனில் 1831-ல் காமன்ஸ் சபையால் வேட்பாளர், வாக்காளர் குறித்த தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இது 1832-ல் நிலப்பிரபுக்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்டது. இந்நடைமுறை நிலவுடமை வர்க்கம் தனது அரசியல் ஆளுமையில் தொழில்துறை முதலாளி வர்க்கத்திற்கு பங்கு தருவதாக இருந்தது. அவ்வர்க்கத்திற்கு ஆட்சியில் பங்கெற்கும் வகையில் பிரதிநிதிகளை அனுப்ப வாக்குரிமைய்ய வழங்கியது.

முதலாளி வர்க்கம் இவ்வாறு அரசியல் ஆளுமையில் பங்கேற்றாலும் அவ்வர்க்கத்திற்கு நேச சக்தியாக விளங்கிய சிறுதர உடைமை வர்க்கத்திற்கும் தொழிலாளி வர்க்கத்திற்கும் தங்களது பிரதிநிதிகளை அனுப்பும் வகையில் வாக்குரிமையை நிலவுடமை வர்க்கம் மறுத்தது. தொழில் துறை முதலாளி வர்க்கம் தனக்கு கீழ்பட்ட வர்க்கங்களுக்கு துரோகம் செய்தது; தான்மட்டுமே சலுகை பெற்று திருப்தி அடைந்தது.

ஆனால், தொடர்ந்த வெகுஜனப் போராட்டங்களின் எதிரொளியாக 1832 மே 8-ல் மனித உரிமை சாசனம் வெளியிட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானது. இதன் மூலம் 21 வயது வந்த ஆடவர் அனைவருக்கும் வாக்குரிமை, (இங்கு நினைவில் கொள்ளத்தக்கது. இந்நூற்றாண்டின் முதல் கால் பகுதியில் தான் பெண்களுக்கு வாக்குரிமை முன்னேறிய நாடுகளிலேயே நடப்பில் வந்தது) பாராளுமன்றத்திற்கு வருடாந்திர தேர்தல், (இன்று பெரும்பாலான நாடுகளில் 5 ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது) சமத்துவத் தேர்தல் தொகுதிகள் (ஒவ்வொரு வர்க்கமும் தனக்கான பிரதிநிதிகளை அனுப்ப ஒதுக்கப்பட்ட தனித்தொகுதிகளையே குறிக்கிறது. இதன்படி தொழிலாளி வர்க்கம் தனக்கான பிரதிநிதி அனுப்ப தனித்தொகுதிகள் அன்று நடப்பில் இருந்தன. இது நமது நாட்டிலிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமே வேட்பாளராக நிற்கமுடியும் என்ற தனித்தொகுதிக்கு ஒப்பானது எனலாம்) பாராளுமன்ற வேட்பாளருக்கு சொத்துடமைத் தகுதி அகற்றப்படுதல் (1. சொத்துள்ளோர் மட்டுமே வேட்பாளராக நிற்கஇயலும்; இது கால வளர்ச்சிப்போக்கில் சொத்து இல்லாதார் என்றாலும் சொத்துடமையையும், அதை பாதுகாக்கும் அரசியல் சட்ட திட்டங்களை ஏற்றுக்கொண்டாலே போதும் என்றாகியது 2. வாக்குரிமை பெற்ற வாக்காளர்கள் என்பவர்கள் சொத்துள்ளவர்களாக இருத்தல் வேண்டும் என்றே ஆதியில் இருந்துள்ளது. சான்றாக தமிழில் வாக்கு எனும் சொல்லுக்கு நிகரான ஆங்கில சொல் "VOTE" ஆகும் இதன் விரிவாக்கம் Voice of Tax payer every where என்பர். தமிழில் சொன்னால் வரிச்செலுத்துபவர்க்கே வாக்குரிமை என்பதாகும்) பாராளுமன்ற உறுப்பினருக்கு படி உதவி ..... எனலாம்.

இதன்மூலம் தொடக்காலத்தில் வேட்பாளரும் சரி, வாக்காளரும் சரி அவர்களது தகுதி "சொத்து"ஐ முன்வைத்தே கணக்கிடப்பட்டது.

இந்தியத் துணைக் கண்டத்தில் பாராளுமன்ற ஆட்சி முறை பிரிட்டிசாரால், காலனி ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்டது எனவே தான் நமது நாட்டின் அரசியல் சட்டத்தின் பெரும் பகுதி பிரிட்டனோடு ஒத்துள்ளது. காலனி ஆட்சியாளர்கள் இந்தியாவில் பாராளுமன்றம் ஏற்படுத்தவும் அதில் பங்கெற்கும் வகையில் முதல் தலைமுறையினரை பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்களாக நியமனம் செய்தனர். இதுவே பிற்காலத்தில் நாட்டை ஆள்வதற்கு பயிற்சி கொடுப்பதாக அமைந்தது எனலாம். மேலும் இன்னொன்றும் மறந்துவிடலாகாது. காங்கிரஸ் கட்சியை உருவாக்கியதும் பிரிட்டானியர்களே என்பதும் கவனம் கொள்ளத்தக்கது.

காலப்போக்கில் ஏகாதிபத்திய வாதிகளால் உருவாக்கப்பட்ட பாராளுமன்றத்தில் அன்னிய நாட்டினர் சொத்துக்கு தீங்கு இல்லாத வகையில் அரசியல் சட்டதிட்டங்கள் வரையப்பெற்றது. அந்த அரசியல் சட்டதிட்டங்களைத்தான் சுதந்திர இந்தியாவில் அம்பேத்கர் தலைமையில் திருத்தத்தோடு வரையப் பெற்றதும் காணத்தக்கது. காலனி ஆட்சிப் பாராளு மன்றத்தில் காங்கிரஸ், நீதிகட்சி போன்றவை பங்கேற்றன என்பதும் கவனம் கொள்ளத்தக்கது.

இந்தியா 1947-ல் சுதந்திரம் அடைந்தது என்பர். ஆனால் நமது நோக்கில் சுதந்திரம்

படிப்பகம்

www.padippakam.com



என்பது வரலாற்றில் எந்தவர்க்கம் மேலாண்மை பெற்றதோ (நமது நாட்டில் சாதி - வர்க்கத்தினர் என சொல்லக்கூடும்) அவ்வர்க்கம் தனக்கான சுதந்திரத்தை உரிமையையே எல்லா மக்கள் பிரிவுக்கும் உரியதாக சித்தரித்தது; திரித்துக் கூறியது. இது உலகெங்கும் கடந்தகால நிகழ்கால வரலாற்றில் இயல்பாக கணக்கூடிய ஒன்றுதான். எனவே இந்திய ஆளும் வர்க்கத்தையும், (தரகு நிலப்பிரபு, முதலாளி வர்க்கத்தை) ஏகாதிபத்திய வர்க்கங்களையும் (இன்று பன்னாட்டு முதலாளி வர்க்கத்தையும் என நாம் சொல்லக்கூடும்) பிரித்துப் பார்க்க முடியாது. மாறாக உடலும் உயிரும் போலவே உள்ளனர் எனலாம்.

ஆகவே தான் 1947 நிகழ்வு அன்னிய மூலதனத்திற்கு முடிவு கட்டவில்லை; மாறாக பாதுகாப்பளித்தது. ஏன் இன்று பன்னாட்டு முதாளித்துவத்திற்கு அரணாக உள்ளது எனலாம். புதுவை பிரெஞ்சு காலனியாக இருந்த இந்தியாவோடு இணைக்கப்பட்டது. இங்கு சமீப சில ஆண்டுகளாக நிலம், வீடு, ஆக்கிரமிப்பு நடந்துள்ளது. இதில் அதிகமாக பாதிக்கப்பட்டோரில் பிரெஞ்சு இந்திய கலப்பினத்தவரும் அடங்குவர்.

இந்த பிரெஞ்சு இந்தியர்கள் தங்களுக்கு நீதி நியாயம் கிடைக்க வேண்டி பிரெஞ்சுப் பாராளுமன்றத்தை வற்புறுத்தும் புகார் செய்தனர். இது பற்றிய செய்திகள் தமிழில் வெளியாகும் வார/மாத/நாளிதழ்களில் வந்ததும் கணக்கில் கொள்ளத்தக்கது.

தொழிலாளி வர்க்கத்தை ஆட்சியில் அமர்த்த வேண்டுமெனில், வெகுசனங்களிடையே தனிச் சொத்துடமையை எதிர்த்த பிரச்சாரம் செய்யவேண்டும்; மனித சமுதாய வளர்ச்சியில் தனிவுடமை எவ்வளவு தீங்கானது; எதிர்கால மனித சமுதாய வளர்ச்சிக்கு தடையானது என்ற உணர்வை வளர்த்தாக வேண்டும். இதற்கு நடப்பிலிருக்கும் பாராளுமன்றத்தை (தனிச்சொத்துடமையை பாதுகாக்கும் உச்சபட்ச நிறுவனம்) ஒழிப்பது; மாற்றாக தொழிலாளிவர்க்க தலைமையில் அரசியல் அதிகாரம் நிறுவுவது அவசியம். இப்பணியில் புரட்சி நடைபெற்ற ரஷ்ய, சீன நாடுகளின் அனுபவங்கள் கணக்கில் கொள்வது அவசியமாகும் - ஏனென்றால் அந்நாடுகளிலேயே "தனிச்சொத்துடமை" தோன்றி உள்ளது. வர்க்கபேதங்கள் வளர்ச்சி அடைந்துள்ளது.

இங்கு மார்க்ஸ் எங்கெல்ஸ் அறிக்கையில் சுட்டிய விசயம் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டியதாகும். அவர்கள் எழுதினர். இதுவரையிலான மனித சமுதாய வளர்ச்சியில் முதலாளித்துவ சமுதாயம் தான் வர்க்க முரண்பாடுகள் கூர்மை அடைந்த கட்டம். இக்கட்டத்தில் தான் வர்க்க முரண்பாடுகள் (நமது நாட்டில் சாதிய வர்க்க முரண்பாடு என்கிறோம்) ஒழிப்பதற்கான வாய்ப்பையும் வழங்குகிறது.

சமுதாயத்தின் வளர்ச்சியில் பொருள் உற்பத்திப் போக்கில் ஏற்பட்ட பற்றாக்குறையின் விளைவே வர்க்கங்களாகும். இந்த முதலாளித்துவ சமுதாயத்தில் தான் சமுதாயத்தின் அனைவருக்கும் தேவைக்கும் அதிகமான பொருள் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் விளைவாக வர்க்கங்களும் மறைந்து தீரவேண்டும். அதை உணர்வு பூர்வமாக முன்கொண்டு செல்வதே கம்யூனிஸ்டுகள் பணியாகும். மேலும் சொல்வர். முதலாளித்துவ சமுதாயத்தில் முதலாளித்துவ வர்க்கமானது அனைத்து குடிமகன்களுக்குமான உரிமைகளை வடிவ அளவினதாகவே வழங்குகிறது. அதாவது, சட்டரீதியாக்கிறது. ஆனால் அந்த உரிமையை செயல்படுத்துவதில்லை.

முதலாளித்துவ வர்க்கத்தால் செய்யமுடியாததை பாட்டாளி வர்க்கம் மட்டுமே செய்யமுடியும். அதாவது பாட்டாளி வர்க்கம் அத்திருப்பணியை புரட்சியின் மூலம் தொடங்கி ஆளும் வர்க்கமாக தொடர்ந்து நிர்வாகம் செய்வதன் வழியே தன்னையே அழித்துக் கொள்கிறது; வர்க்கங்களற்ற சமுதாயத்தை படைக்கிறது.

புரட்சிக்கு பிந்தைய நாட்டின் அனுபவங்களையும் கொண்டு தொழிலாளி வர்க்கம் எவ்வாறு ஆளுமை செய்யவேண்டும் என்பது பற்றி தோழர் தியாகு மார்க்சியத்தின் எதிர்காலம் எனும் நூலில் காட்டி உள்ளார்,

ரசிய சீனப்புரட்சிக்குப் பின்னால், புரட்சி வெற்றி பெற்று நாம் அமைக்கும் ஆட்சிமுறைக்கும் நடப்பிலிருக்கும் ஆட்சிமுறைக்கும் உள்ள வேறுபாடு என்ன? என்றும் காண்பது அவசியம். ரசியாவின் அனுபவங்களை கணக்கில் கொண்ட தோழர் கிராம்சி

படிப்பகம்

www.padippakam.com


(இத்தாலி) கூறியதும் கணக்கில் கொள்ளத்தக்கதாகும். புரட்சிக்கு முந்தைய கட்டத்திலேயே பாட்டாளி வர்க்கத்திற்கு ஆளும் வர்க்கமாக ஒழுங்கமைய பயிற்சி அளிப்பது. அவசியம். இதை ரசிய, சீன, அனுபவங்கள் கூடுதல் தேவையாக்குகிறது.

ஆகவே நடப்பிலிருக்கும் பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு மாற்றாகவும், தங்களின் சொந்த அனுபவங்கள் வாயிலாகவும் புரிய வைக்க வேண்டும். நமது நாளைய நிர்வாக முறை திட்டவட்டமாக இவ்வாறு தான் இருக்கவேண்டும் எனச் சொல்லலாம்; முடிந்தளவு அத்தகைய நிர்வாக முறையை நோக்கிய நடைமுறையை செயல்படுத்த முயற்சிக்கலாம் கிராம்சி இத்தாலியில் தொழிற்சாலை கவுன்சில்கள் நிறுவியது போல; இந்நடைமுறையில் கிராம்சி வழிமுறையினர் தோற்றாலும் அளப்பரிய தியாகம் மூலம் மகத்தான சாதனைகளைச் செய்தனர் என லெனினே எழுதும்படி நேர்ந்தது. இங்கு நினைவு கூறத்தக்கது.

ஆனால், சி.பி.ஐ. சி.பி.ஐ. (எம்) சி.பி.ஐ. (எம்.எல்) கட்சிகள் தொலை நோக்கோடு பார்க்க தவறி விட்டன; இதை குறிப்பாகச் சொல்வோம்.

சி.பி.ஐ. சி.பி.ஐ. (எம்) கட்சிகள் நடப்பிலிருக்கும் சமுதாயத்தில் தனிச்சொத்துடமை உறவுகளை ஒழிப்பதை கைவிட்டு விட்டனர். பல பத்தாண்டு கால நடைமுறையாகும். ஆகவே தான் தனிச்சொத்துடமையை பாதுகாக்கும் பாராளுமன்ற சனநாயக வழி முறையிலேயே என்பதாகிறது. அதாவது காங்கிரசுக்கு மாற்றாக ஆளும் கட்சியாக மாறினாலே போதும் எனும் முடிவுக்கு அடிப்படை இருந்தது. ஆனால் இன்றோ காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுனர். இதற்கு காரணமாக பா.ஜ.க. வந்துவிடக் கூடாது என விளக்கமும் அளிக்கின்றனர் இரண்டு எதிரிகள் களத்தில் நின்று சண்டையிடும் சூழலில் புதிதாக ஒருவன் இருவருக்கும் எதிரியாக தோன்றுகிறான். இதைக்கண்டு இருவரும் சண்டை செய்வதை நிறுத்தி இந்த புது எதிரியை ஒழித்துவிட்டு நாம் களம் கண்போம் என்பது போலவே உள்ளது. சி.பி.ஐ. சி.பி.ஐ. (எம்) கட்சியினரின் தங்களது எதார்த்த சூழலைப் பற்றிய மதிப்பீடு தவறானது என்பதை ஏற்றுக்கொள்ளளாமல், அதை நியாயப்படுத்துவதாக உள்ளது. சுருக்கமாகச் சொன்னால் யாரை எதிரியாக கருதி மக்கள் முன் பிரச்சாரம் செய்தோமோ அவர்களை நண்பனாக கருதும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்நடைமுறை தங்களை இனிமேலும் தொழிலாளி வர்க்க கட்சி எனச் சொல்லிக் கொள்ள எந்தவித தார்மீக நியாயமும் இல்லாததாகிறது; முதலாளித்துவ வர்க்க கட்சிகளில் பத்தோடு பதினொன்றாகவே மாறி உள்ளனர்.

இதே போல சி.பி.ஐ. (எம்.எல்) குழுக்கள் தேர்தலில் பங்கெடுத்தாலும் சரி, புறக்கணிப்பு செய்தாலும் கூட அவர்கள், எதார்த்த சமுதாயத்தில் தனிச்சொத்துடமையை ஒழிக்க முனைவதாக இல்லை; மாறாக ஏதோ ஒரு விதத்தில் சமரசம் செய்து கொள்வதாக உள்ளது. இக்குழுக்கள் அனைத்துமே "புதிய சனநாயகப் புரட்சி" என்பதை முன்வைப்பர்; இது சாத்திய மற்றது என இதற்கு முந்தைய உறவு இதழ்களில் குறிப்பிட்டுள்ளோம்; ஏன் இந்த இதழில் ம.க.இ.க விற்கு ஒருகடிதம் என்பதில் முன்வைத்துள்ளோம் என்பதையும் வாகர்களுக்கு ஞாபகப்படுத்துகிறோம். இருந்தாலும் இங்கு புதிய சனநாயகப் புரட்சி என்று முன்வைக்கும் நிலையிலிருந்து தனிச்சொத்துடமையை ஏற்றுக் கொள்கின்றனர் என்பதை விளக்குவோம்.

புதிய சனநாயகப் புரட்சி என்பது பிரதானமாக தேசிய முதலாளிய வளர்ச்சிக்கு உதவுவது; விவசாயிகளுக்கு நிலங்களை பிரித்துக் கொடுப்பது என்பர். (உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்றபடி) இதன்மூலம் நாம் அறிவது தனிச்சொத்துடமையை ஒழிப்பை முன்நிறுத்தவில்லை; மாறாக ஏதோ ஒருவிதத்தில் எதார்த்த சமுதாயத்தில் ஏற்றுக் கொள்வதாகிறது. இக்கண்ணோட்டம் எதார்த்த சமுதாயத்தில் தனிச்சொத்துடமையை ஏதோ ஒருவிதத்தில் கட்டிக்காப்பதாகவே முடிந்துவிடும்.

இந்த தனிச்சொத்துடமையை பாதுகாக்கும் நிறுவனம் தான் பாராளுமன்றம் என்பதை ஒத்துக் கொள்கின்றனர். ஆனால் தனிச்சொத்துடமையை ஒழிப்பை பிரதானமாக முன் எடுக்காததால் அதன் வடிவத்தை மட்டுமே எதிர்ப்பதாகிறது; அதாவது தேர்தலை புறக்கணிப்பதாகிறது. இந்த வடிவ அளவிலான எதிர்ப்பானது மக்கள் மத்தியில் சாரமற்று

படிப்பகம்

www.padippakam.com



போகிறது எனக் காணும் முன் குழுக்களுக்கு இடையேயான முரண்பாட்டை நோக்கி நம் கவனத்தைச் செலுத்துவோம்.

மா. லெக்குழுக்கள் அனைத்துமே சாராமாகப் பார்த்தால் புதிய ஜனநாயகப்புரட்சி என்பதில் உடன்படுவர். இந்த புதிய சனநாயகப் புரட்சியை சாதிக்கும் விதத்தில் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு நிலைப்பாடுகளை முன்வைத்து வேறுபடுவர். இந்த நிலைப்பாடுகளுக்கு அடிப்படையான திசை விலகலுக்கு காரணம் எது எனும் அடிப்படையில் சாராம்சமாக (பெரும்பான்மையாக) பார்ப்பதில்லை; ஆனால் எமது கருத்தில் தனிச்சொத்துடமையை பிரதானமாக ஒழிப்பதை முன் நிறுத்தாததால் அதன் தவிர்க்க இயலாததாக வெளிப்படும் பல்வேறு விசயங்களை முன் நிறுத்துவர் உ-ம் சொன்னால் கடந்தகாலத்திலிருந்து பார்த்தால் மூன்றுலக கோட்பாடு, புரட்சிக்கான பாதையை தேர்ந்தெடுத்தல், தேர்தல் புறக்கணிப்பு அல்லது பங்கெடுப்பு ஆயுதப்புரட்சி, இன, மொழி பிரச்னைகள் என சொல்லிக் கொண்டே-போகலாம்.

எனவே தான் மா.லெ இயக்கத்தில் தோன்றிய முரண்பாடுகள் சிறு சிறு குழுக்களாக சிதைய காரணமாகியது. சுருக்கமாகச் சொன்னால் புதிய ஜனநாயகப் புரட்சியை முன்எடுக்க முதன்மையாக குழுக்களுக்கிடையே மாபெரும் சனநாயகப் புரட்சி தேவைப்படுகிறது. சனநாயக பூர்வமான முறையில் கருத்து வேற்றுமைகளை வாதப் பிரதிவாதங்களுடன் தீர்த்துக் கொள்ளும் நிலை இல்லாமல் போனது. இவ்வாறு புரட்சியாளர்களே பிளவுபடும் கண்ணோட்டத்தில் எவ்வாறு புரட்சியை சாதிக்கமுடியும்? மேலும் எந்தவொரு வேற்றுமையும் பெரிதாக சித்தரித்து இடையறாத கண்ணோட்டத்தில் நண்பர்களையே எதிரியாக கருதுவதாகிறது.

சுருக்கமாகச் சொன்னால் சி.பி.ஐ. சி.பி.ஐ. (எம்) ஆளும் வர்க்கத்தையே - எதிரியையே நண்பராக கருதுவதாகிறது. சி.பி.ஐ. (எம்.எல்) குழுக்களோ ஆளும் வர்க்கத்திற்கு எதிராக ஒன்று திரள வேண்டிய சக்திகளையே தமக்குள் எதிரியாக்கிக் கொள்கின்ற கண்ணோட்டமாகும். முன்னவர் மக்களின் அறிவு மட்டத்தை உயர்த்தி மக்களுக்கு தலைமை தாங்குவதற்கு பதிலாக மக்களின் உணர்வுக்கு (அறிவுக்கு) தங்களையும் தாழ்த்திக் கொள்வதை காட்டுகிறது. பின்னது மக்களிடம் அறிவு மட்டத்தை உயர்த்தி தலைமை தாங்குவதற்கு பதிலாக தங்களது உணர்வையே பிரதானப்படுத்தி மக்கள் திரளினரின் பாத்திரத்தை சிறுமைப்படுத்தி விடுகிறது.

இது தேர்தல் முறையிலும் பங்கெடுப்பது அல்லது புறக்கணிப்பது என்பதாகிறது. இது ஒன்றுக்கொன்று எதிரானது மட்டுமல்ல; தவறானதும் ஆகும். சுருக்கமாகச் சொன்னால் மனித உடலிலிருந்து உயிரைப் பிரித்து மனிதன் என்பவன் உயிர்தான் இல்லை உடல்தான் என்பதாகிறது. உடலிலிருந்து உயிரை பிரித்து இது தான் மனிதன் என காட்ட முயற்சிப்பது எவ்வளவு அபத்தமானதோ அதே அளவு அபத்தமானது; தனிச்சொத்துடமையையும் அதன் விளைவான பாராளுமன்றத்தையும் எதிரெதிராக நிறுத்தி இதில் ஏதோ ஒன்றுதான் எதிரானது; பிரதானமானது என்பதும்.

மேற்கூறிய இரு கண்ணோட்டங்களும் முறையே வலது திரிபுவாதம் (சி.பி.ஐ. சி.பி.ஐ.எம்) இடது திரிபுவாதம் (சி.பி.ஐ.எம்.எல் குழுக்கள்) ஆகும் என பேராசான்களும் தோழர் லெனினும் காட்டி உள்ளனர்.

நாம் ஆளும் வர்க்கத்தையே நண்பனாக கருதும் சி.பி.ஐ. சி.பி.ஐ. (எம்) போன்றோரை பெரிதாக கருதவில்லை. ஆனால் சி.பி.ஐ. (எம்.எல்) பிரிவினரை முக்கியமாக எடுத்துக் கொள்ள வேண்டி உள்ளது. எனவே நாம் இங்கு தேர்தல் புறக்கணிப்பு குறித்து சற்று விரிவாக பார்ப்பது அவசியமாகும்.

தேர்தல் புறக்கணிப்பு என்பது நாம் வலியுறுத்தவேண்டும் என்பதை விட மக்களே அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒருசில இடங்களில் புறக்கணிப்புச் செய்கின்றனர். அவ்வாறு தன்னியல்பாக புறக்கணிக்கும் மக்கள் ஒருசில கோரிக்கைகளும் முன்வைக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதாவது உடனடி நலனுக்கான கோரிக்கைகளாக (சாலை வசதி, மருத்துவ வசதி, குடிநீர் வசதி இன்ன பிற...) முதலாளித்துவக்கட்சிகள் இக்கோரிக்கைகளை நிறைவேற்றியோ அல்லது, நிறைவேற்றுவேன் என வாக்குறுதி கொடுத்த சமாதானம் செய்கின்றனர். சில சமயம் அவர்களால் திருப்திபடுத்த முடியாத ஒன்றாகவும் இருக்கிறது. தன்னியல்பாக தேர்தல் புறக்கணிப்பை முன்நிறுத்தும் மக்கள் திரளினரைக்கூட

படிப்பகம்

www.padippakam.com



ஐக்கியப்படுத்தும் கட்சிகள் எதுவும் இல்லை; தன்னியல்பான போராட்டங்களை கட்டுப்படுத்தி உணர்வு பூர்வமான போராட்டமாக ஊக்கப்படுத்தும், தலைமை தாங்கும் சித்தாந்தவாதிகளும் இல்லை என்பதும் வருத்தத்தக்கது. அதே நேரத்தில் தேர்தலில் நாடு முழுவதும் 60% க்கு மேல் வாக்களிப்பதாக இல்லை; சுமார் 40%ல் வேறு சில காரணங்களை முன்னிட்டு வாக்களிக்காதவர்கள் 15% மாக கொண்டால் கூட சுமார் 25% மக்கள் வாக்களிப்பதே இல்லை; அவர்களைப் பொறுத்தவரை இராவணன் ஆண்டால் என்ன? இராமன் ஆண்டால் என்ன? என்பதாகவே உள்ளது. அதேபொழுது வாக்களிப்பவர்களில் 60%ல் பாதிப்பேருக்கும் சற்றே குறைவானவர்கள். ஏதோ ஒருவிதத்தில் இந்த தேர்தல் மற்றும் சமுதாய அமைப்பின் மீது அதிருப்தியுற்றுள்ளனர் என்றும் கருத வேண்டியுள்ளது. ஏனென்றால் அந்த 20% மக்கள் தான். அந்த அல்லது இந்தகட்சியை மாற்றி மாற்றி தேர்ந்தெடுக்கின்றனர் என்னும் (சமீப) சில பத்தாண்டுகளாக கருத இடந்தருகிறது.

நாட்டின் மக்கள் தொகையில் 5% கூட பெறாதவர்கள் பத்து இருபது இடங்களும் அதைவிட ஒரிருமடங்கு வாக்கு பெற்றவர்கள் அதைவிட மடங்குகுறைவான இடங்களை பெறுகின்றனர். இவ்வாறு குறைவான இடங்களை பெற்றவர்கள் - ஒரு மாநிலத்தில் மட்டுமே வேர் கொண்ட கட்சி நாடுமுழுவதும் பரவலாக செல்வாக்கு கொண்ட கட்சியை மிரட்டுவதும் தனது சுயநலன் பொருட்டு ஏதோ ஒரு மக்கள் பிரச்சனையைச் சொல்லி சலுகை பெறத்துடிப்பதும் காணக்கூடிய ஒன்றாக உள்ளது. (உ-ம்) ஜெ.வின் மிரட்டல்கள் எனலாம். இது எதைக் காட்டுகிறது. எந்த ஒரு சிறுபான்மைக் கட்சியினரும் கூட நமது அரசியலமைப்பில் பெரும்பான்மையினரை தனக்காக கட்டுப்படுத்த முடியும்; தமது கோரிக்கையை நிறைவேற்ற முடியும் என்றாகிறது.

நாட்டில் நிலவும் அரசியல் பொருளாதாரச் சூழல் ஆளும் வர்க்கத்தையும், ஆளப்படும் வர்க்கத்தையும் பழைய நிலை வழிப்பட்டு வாழ முடியாததாகவே கருத இடமுள்ளது. எனவே தான் தமது வாழ்க்கையின் தேவையை மென்மேலும் அடைய முடியாவிட்டாலும், குறைந்தபட்சம் தக்கவைத்துக் கொள்வதற்கான தேவையை அவசியமாக்குகிறது. இதன் காரணமாகவே மக்கள் திரளினர், சாதி, மதம், இனம், மொழி அடிப்படையில் கருத்துருவங்களை முன்னிறுத்தி போராடுவதையும் காணமுடிகிறது. இவர்கள் கூறும் கருத்துக்கள் சாதி, மத, மொழி, இனம், அடிப்படைக்காக போராடுவதாக கூறிக் கொண்டாலும், அதற்காகவே அவர்கள் போராடவில்லை. மாறாக தமது ஆளுமையை மேம்படுத்திக் கொள்ள அல்லது தக்கவைத்துக் கொள்வதற்காக முன்நிறுத்தும் கோரிக்கைகளைக் கொண்ட முழக்கமாககிறது எனலாம். உ.ம் சொன்னால் மதவாதம், ஊழல் எதிர்ப்பும், மாறி மாறி கூட்டணி சேர்ந்ததும் ஆகும். இது மார்க்ஸ் ஒருமுறை கூறியதை ஞாபகப்படுத்துவதாக உள்ளது. அவர் எழுதினார். "பழையவர்கள் பெயரில் புதியவர்கள் நடமாடுகிறார்கள்; பழையவற்றுக்காக பெருமை சேர்ப்பதற்காக அல்ல; மாறாக தாங்கள் வாழவேண்டும் என்பதற்காக" என்பதும் பொருத்தமாக உள்ளது.

இவ்வாறு பழைய கட்சிகள், கூட்டணிகளை மீறி தமது நலனை முன்னிறுத்தி மக்கள் திரளினர் போராடுகின்றனர். இதற்கு சாதி, மதம், இனம் என்ற சிறுபான்மையினர்களை கணக்கில் கொள்ள வேண்டிய தேவை கட்சிகளுக்கு ஏற்படுகிறது. இதை குறிப்பாகச் சொல்வோம். தலித்கள் தமிழகம் முழுவதும் பரவலாக உள்ளனர். மொத்த மக்கள் தொகையில் குறிப்பிடத்தக்க அளவு உள்ளனர். அதே நேரத்தில் எந்தஒரு தொகுதியிலும் அவர்கள் வெற்றி பெறக்கூடியவர்களாக (தனித்து) இல்லை. ஆனால் வெற்றி தோல்வியை தீர்மானிக்கக் கூடியவர்களாக உள்ளனர்.

நாளைக்கு உணவு கிடைக்கும் என்பதற்காக இன்று உணவு உண்ணாது இருக்க முடியாது; இன்று உணவு கிடைத்தது என்பதற்காக நாளை உண்ணாதும் இருக்கமுடியாது. இதுபோலவே தான் தலித் மக்கள் உணருகின்றனர். இது இயல்பே! எனவே தான் கூட்டணி அமைத்து போட்டியிட வேண்டியதாகிறது; ஒரு சில இடங்களிலாவது வெற்றி பெறலாம்; தங்கள் மீதான ஒடுக்கு முறையினை குறைக்கலாம். ஆனால் ஒருபோதும் தலித்களின் பெரும்பான்மையினரின் பிரச்னைகளை தீர்த்துவிட முடியாது; தனிச்சொத்துடைமையும் அதை பாதுகாக்கும் பாராளுமன்றம் இருக்கும் வரை எனலாம். தலித் மக்கள் ஒன்று திரண்டு மறுபடியும் ஆளும் வர்க்க கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்துவிடாமல் ஓர் அணியாகவே இருந்து தங்கள் பிரதிநிதிகளை அனுப்பும் வகையில்

படிப்பகம்

www.padippakam.com


விகிதாச்சார பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தலாம். இதன் மூலம் ஒருசிலர் பதவிக்கும் அதிகாரத்திற்கும் ஊக்கமளிக்கலாம். என்றாலும் காலப்போக்கில் இந்த சமுதாய அமைப்பு மாறாமல் எதுவும் பெரும்பான்மை மக்களை திருப்திப்படுத்த முடியாது எனவும் அம்மக்களுக்கு புரிய வைக்கலாம். தம் சொந்தக்காலில் நிற்கவைக்கலாம். முதலாளித்துவக் கட்சிகளோடு கலந்து விடாமல் செய்ய இயலும்.

மேலும் கட்சிகள் பெறும் வாக்கு விகிதத்திற்கு ஏற்ப இடங்களைப் பெறுவதன்மூலம் திரைமறைவு பேரங்களை குறைக்கலாம்; கட்சிகளிலிருந்து பதவிக்கும் பணத்திற்கும் ஆசைப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கு துரோகம் செய்து கட்சி தாவுதலும் குறைக்கலாம். மேலும் ஆட்சியில் இருந்தபோது ஊழல் செய்து சொத்து குவித்து இருந்தாலும் தனது அதிகாரத்தின் மூலம் ஊழல் செய்யவில்லை என்பதை காட்டுவதற்கு எதிராக அவர்கள் செய்யும் முயற்சிகளை பகிரங்கப்படுத்தலாம்.

அதேபோல மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தவறு செய்யும் பட்சத்தில் அவர்களை திருப்பி அழைக்கும் உரிமை கோரலாம். ஏனென்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி ஆட்சி காலத்தில் என்ன செய்தாலும் யாரும் கேட்க முடியாது எனும் நிலைக்கு முடிவு கட்டலாம். தேர்தல் கமிஷன் என்பது தேர்தல் காலத்தில் மட்டுமே பணிசெய்வது என்பது போய் எல்லாக்காலத்திலும் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் நிரந்தர அமைப்பாக வாக்காளர் பேரவை உருவாக்கலாம் (இது தொழிற்சாலையை தொழிலாளர்கள் நிர்வாகம் செய்ய கிராம்ஜி தலைமையில் தொழிற்சாலைக் கவுன்சில் அமைத்தது போல வாக்காளர். பேரவையையும் செயல்படும்படி கோரலாம்; செய்யவும் முடியும். மறைந்த தொழில் அதிபர் ஏ.எம்.எம். அருணாசலம் என்பவர் கூட திருப்பி அழைக்கும் உரிமையை அரசியல்சட்டத்தில் கொண்டு வரலாம் என தினமணிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். இந்த சமுதாயத்தில் முதலாளித்துவ வர்க்கத்தினருக்கும் அவசியமாகிறது; இதை தொலை நோக்கான முறையில் நாமும் பயன்படுத்தலாம். பொதுவான சனநாயக கோரிக்கையாகவும் முன்வைக்கலாம்.

மேலே பார்த்தவற்றிலிருந்து எந்தவித கோரிக்கையும் இல்லாமலே தேர்தலை புறக்கணிப்பதற்கு பதிலாக இரு கோரிக்கைகளை முன்வைக்கலாம். 1) விகிதச்சார பிரதிநிதித்துவம், 2. திருப்பி அழைக்கும் உரிமை, இருந்தால் மட்டுமே நாங்கள் தேர்தலில் பங்கெடுப்போம்! அல்லது இக்கோரிக்கை ஏற்றுக்கொள்ளும் கட்சியை ஆதரிப்போம். இந்த கோரிக்கைகள் எந்த அளவிற்கு மக்கள் மத்தியில் கொண்டு செல்கிறோமோ அந்த அளவிற்கு செல்வாக்குப் பெறமுடியும். இதன்மூலம் மற்ற முதலாளித்துவக் கட்சிகளிலிருந்து நம்மை வேறுபடுத்திக் காட்டமுடியும். அவர்களுக்கு நெருக்கடி தரலாம். மேலும் நாம் சூழலுக்கு அடிபணியாமல் சூழலை மாற்றுவதாக அடியெடுத்து வைக்கலாம். வர்க்க உணர்வு மென்மேலும் கூர்மைப்படும். இதன் மூலம் சமுதாயப் புரட்சி குறித்த தேவையை வலியுறுத்தலாம்; மக்கள் தாமே அதை நோக்கி சிந்திப்பது தூண்டு விசையாகும்.

சுருக்கமாகச் சொன்னால் இன்றைய சூழலில் எந்தவித நிபந்தனையின்றி தேர்தலை புறக்கணிப்பது சரியல்ல; மக்கள் திரளினரின் உணர்வை அனுபவத்தை - அறிவுபூர்வமாக செயல்படுவதை புறக்கணிப்பதாகும்; நமது உணர்வை - அறிவை செயலை முன்னிறுத்துவதாகும். மக்கள் தான் வரலாற்றை படைக்கிறார்கள் எனசொல்லிக் கொண்டே எதிராக செயல்படுவதாகவே இருக்கும்.

எனவே, தோழர் சுப. வீ அவர்களே! பொதுவுடமைவாதிகளோ குறிப்பான அரசியல் சூழலுக்குத் தக்கபடியான முடிவை எடுக்காத பட்சத்தில் வி.சி அமைப்புக்களிடம் எதிர்பார்ப்பது முடியாது. அவர்களை அறிவு பூர்வமாக நம் பக்கம் கொண்டு வருவதற்கு எந்த முயற்சியும் இல்லாமலே விமர்சனம் செய்வது நமது செயலற்ற தன்மைக்கு சான்றாகும். நமது உணர்வை அறிவுபூர்வமான செயலாக மாற்றவியலாத வெறுப்பு உணர்ச்சிகளுக்கு இடமளிப்பதாகவே அமையும்.

அன்புத் தோழரே! உங்களது கருத்துக்களையும் எதிர்பார்க்கிறோம்.

நன்றி!

புரட்சிகர வணக்கங்களுடன்

**உறவு**

அச்சாக்கம் : பாண்டியன் கணினி அச்சு, மதுரை-1. ✆ 746927

படிப்பகம்

www.padippakam.com

# உறவு இதழ் - ஓராண்டு நிறைவு

## வாசகர் சந்திப்பு...

## இதழ் திறனாய்வு குறித்து...

நாள் : 5-12-99, ஞாயிற்றுக்கிழமை

இடம் : மதுரை

தலைமை : தோழர். சண்முகநாதன்

துவக்கவுரை : பேரா. சே. கோச்சடை

கருத்துரை : தோழர் முரளி ம.ப.பே. (சாலை கிராமம்)

தோழர் சிலப்பதிகாரம் இ.பொ.க. (மா.லெ) செங்கொடி

தோழர் பேரா. ராசமுருகுபாண்டியன், காரைக்குடி

நிறைவுரை : தோழர் பாலசுப்பிரமணியன் (ஆசிரியர்)

இவர்களோடு நீங்களும்

சமுதாய மாற்றத்தில் அக்கறை கொண்டோர்

அனைவரும் வருக.

கருத்துப் பரிமாற்றம் செய்வோம் - புது உலகம் படைப்போம்.

அனைத்து தொடர்புக்கும்:

**கா.சே. பாலசுப்பிரமணியன்**

6/5, கீழ்க்கொரட்டியார் தெரு,

காரைக்குடி - 630 001.

தொ.பே. (பீ.பி) 04565 - 36765

தனிஇதழ் : ரூ. 5.00

ஓராண்டு சந்தா : ரூ. 50.00 (தபால் செலவு உள்பட)

படிப்பகம்